| | | |
|---|---|---|
| | கடலூர்<br>மா.ஆ.நி | **கடலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்**<br>கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,<br>எண்.3, கடற்கரை சாலை,<br>கடலூர் மாவட்ட சரவணபவ நுகர்வோர் கூட்டுறவு<br>மொத்த விற்பனை பண்டகசாலை வளாகம்,<br>கடலூர்–607 001 |
| | Cuddalore<br>D.R.B. | |


நாள்-29 .08.2019

## திருத்த அறிவிப்பு

கடலூர் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கூட்டுறவு நிறுவனங்கள்/மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள 59 உதவியாளர் பதவிகளுக்கான நேரடி நியமனத்திற்கு கடலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படவுள்ள எழுத்துத் தேர்விற்கு இணையவழி விண்ணப்பிக்க அறிவிப்பு எண் 1 & 2 நாள் 19.08.2019-ன்படி அறிவிப்பு வெளியிடப்பட்டு www.cuddrb.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றது. இணையவழி விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு தெரிவிக்கப்பட்ட கடைசி நாள் 12.09.2019 லிருந்து மாற்றம் செய்யப்பட்டு 23.09.2019 வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்படுகிறது.

மேற்படி அறிவிப்பில் கல்வி தகுதி குறித்த பத்தி 2(ஆ)ல் "கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே" என்பதற்கு பதிலாக "கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மற்றும் 2019-20ஆம் ஆண்டில் கூட்டுறவு மேலாண்மை நிறுவனத்தில் முழுநேரமாக/அஞ்சல்வழி மூலமாக பயிற்சி பெற்று வருபவர்களும்" என திருத்தம் அறிவிக்கப்படுகிறது.

இத்தேர்விற்கான குறைந்த பட்ச கல்வித் தகுதி, வயது வரம்பு, இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி, தேர்வுக்கான பாடத்திட்டம், தேர்வுக் கட்டணம் மற்றும் பிற விவரங்களுக்கு கடலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளத்தில் (www.cuddrb.in) வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தை காணலாம்.

தலைவர்<br>
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்<br>
கடலூர்

ஆ) கல்வித் தகுதி: ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree) (10+2+3 pattern) மற்றும் கூட்டுறவுப் பயிற்சி.

- பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்குப் பதிலாக, பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணி புரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்புச் சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல் நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்கள் மற்றும் 2019-20 ஆம் ஆண்டில் கூட்டுறவு மேலாண்மை நிறுவனத்தில் முழுநேரமாக/அஞ்சல்வழி மூலமாக பயிற்சி பெற்று வருபவர்களும் மேற்படி உதவியாளர்/எழுத்தர் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவுப் பயிற்சி குறித்த விரிவான விவரங்கள் அடங்கிய பதிவாளரின் சுற்றறிக்கை எண் 29/2013, நாள் 18.07.2013 கடலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப் படிப்பின் போது தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணினி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

இ) பொது

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவர்.
- 'ஆதரவற்ற விதவை' என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுய தொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி ஆட்சியர்** அல்லது **சார் ஆட்சியரிடமிருந்து** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

**3. விண்ணப்பக் கட்டணம்**

**அ) விண்ணப்பப் பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/– ஆகும்.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்துப் பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்துப் பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.